## எனது மனைவி பரிசோதிக்கப்படுவது முக்கியமா?

ஆம் நீங்கள் பிள்ளைகள் பெறுவதற்கு திட்டமிடுவதானால் இது மிகவும் முக்கியம்.

## எனது குடும்பத்தின் வேறு அங்கத்தவர்கள் எவரும் தாலசரத்தத்திற்கு (Thalassaemia) சோதிக்கப்பட வேண்டுமா?

ஆம். உங்களது பிள்ளைகள் சிலருக்கு தாலசரத்தம் இருக்கக்கூடும் ஆகையால் அவர்கள் பரிசோதிக்கப்பட வேண்டும். உங்களது சகோதரர்களும் பரிசோதிக்கப்பட வேண்டும் குறிப்பாக அவர்கள் பிள்ளைகள் பெறத் திட்டமிட்டால்.

## அவர்கள் எங்கே பரிசோதிக்கப்பட வேண்டும்?

தாலசரத்தத்திற்கு ஒரு இரத்தப் பரிசோதனையை ஒரு குடும்ப வைத்தியர்/பொது வைத்தியர் மூலம் ஒழுங்கு செய்யலாம்.



Thalassaemia AUSTRALIA
Unifying support and genetics

## தாலசரத்தத்தைப் பற்றிக் கூடுதலாக நான் எப்படி அறிந்து கொள்ள முடியும்?

தாலசரத்தத்தைப் பற்றி கூடுதலான தகவலுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள்:

**தாலசரத்தம் அவுஸ்திரேலியா இணைக்கப்பட்டது**
333 Waverley Road, Mt. Waverley VIC 3149
தொலைபேசி: 03 9888 2211
மின்னஞ்சல்: info@thalassaemia.org.au
வலைத்தளம்: www.thalassaemia.org.au

**தாலசரத்தச் சேவைகள் விக்ரோரியா**
வைத்திய சிகிச்சைப் பிரிவு, Monash Medical Centre
246 Clayton Road, Clayton VIC 3168
தொலை பேசி: 03 9594 2756

**பெண்களின் மேசி வைத்தியசாலை**
மரபியல்
163 Studley Road, Heidelberg VIC 3084
தொலைபேசி: 03 8458 4250

**றோயல் பெண்கள் வைத்தியசாலை**
தாலசரத்த மருத்துவமனை
Cnr. Grattan Street and Flemington Road, Parkville VIC 3052
தொலைபேசி: 03 9342 7000 தொலைநகல்: 03 9342 7802

### NSW இல் தொடர்பு:

**தாலசரத்த சமுதாயம் NSW**
Level 7, King George V Building,
Messendan Road, Camperdown NSW 2050
PO Box M120 Camperdown NSW 2050
தொலைபேசி: 02 9550 4844 தொலைநகல்: 02 9519 3517
மின்னஞ்சல்: coordinator@thalnsw.org.au

லோர்ட் மேயரின் தரும நிறுவனத்தினால் பெருமையுடன் ஆதரவளிக்கப்படுகிறது

November 2011

Thalassaemia AUSTRALIA
Unifying support and genetics

TAMIL



# உங்களுக்கு பீட்டா சிறிய தாலசரத்தம் இருக்கிறதா....

உங்களுக்கும் உங்களது குடும்பத்திற்கும் முக்கியமான தகவல்

Thalassaemia
AUSTRALIA
Unifying support and genetics

# தாலசரத்தம் என்றால் என்ன?

தாலசரத்தம் ஒரு மரபுவழிப்பட்ட நிலைமை இது சிவத்த இரத்த அணுக்களிலிருக்கும் ஆக்சிஜனைக் கொண்டு செல்லும் கூறு ஹிமோகுளோபினின் உற்பத்தியைப் பாதிக்கிறது.இது இரண்டு வடிவங்களில் காட்சியளிக்கிறது – சிறிய தாலசரத்தம் (கொண்டு செல்பவர் அல்லது ஹெற்ரோசிஜஸ் வடிவம் (heterozygous form) மற்றும் பெரிய தாலசரத்தம் ஹோமோசிகஸ் வடிவம் (homozygous form).

## நான் எப்படி இதைப் பெற்றேன்?

நீங்கள் இதை மரபுவழியாகப் பெற்றுக்கொண்டீர்கள். உங்களது பெற்றோர் ஒருவரிடம் இருந்து இது இடமாற்றம் செய்யப்பட்டது.

## நான் எப்போதும் இதை வைத்திருப்பேனா?

ஆம். சிறிய தாலசரத்தத்துடன் நீங்கள் பிறந்திருந்தால் இது உங்களுக்கு எப்போதும் இருக்கும். இது உங்களைவிட்டுப் போகாது, பெரிய தாலசரத்தமாக அல்லது வேறு ஒரு நிலைமையாக மாற்றமடையாது. இது தொற்ற மாட்டாது.

## எனது உடல்நலம் பாதிக்கப்படுமா?

இல்லை. சிறிய தாலசரத்தம் ஒரு கொண்டு செல்லும் நிலை மற்றும் இது கொண்டு செல்பவரின் உடல்நலத்தைக் கடுமையாகப் பாதிக்காது. சிகிச்சை ஒன்றும் தேவைப்படாது. ஆயினும் நீங்கள் செல்லும் எல்லா வைத்தியர்களிடமும் நீங்கள் இதைக் கூற வேண்டும் இது அவசியமில்லாத இரத்தப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளைத் தவிர்க்கும்.

## சிறிய தாலசரத்தம் எனது உடல்நிலையைப் பாதிக்காவிட்டால் பிரச்சினை எங்கே இருக்கிறது?

பிரச்சனை நீங்கள் மற்றும் உங்களது துணைவர் இருவருக்கும் சிறிய தாலசரத்தம் இருந்தால் உங்களுக்கு பெரிய தாலசரத்தமுள்ள பிள்ளைகள் பிறக்கக்கூடும்.

## பெரிய தாலசரத்தம் என்றால் என்ன?

பெரிய தாலசரத்தம் ஒரு கடுமையான இரத்தசோகையை ஏற்படுத்தும் ஒரு நிலைமை.

பெரிய தாலசரத்தமுள்ள மக்கள் ஒழுங்கான குருதி ஏற்றத்தில் தங்கி இருக்கிறார்கள் மற்றும் அவர்களுக்கு நாளாந்த மருந்துச் சிகிச்சை தேவைப்படும். சிகிச்சை பெறாவிட்டால் இவர்கள் இரத்தசோகையின் பலன்களால் வாழ்க்கையின் முதல் சில வருடங்களுக்குள் இறந்து போவார்கள்.

## தாலசரத்தம் வேறு மக்களைவிட சில இனம்சார் குழுக்களிடம் சாதாரணமாக காணப்படுகின்றதா?

தாலசரத்தம் எந்த இன மக்களுக்கும் இருக்கலாம் ஆயினும் இது சைபிறஸ், கிரேக்கம், இத்தாலி, துருக்கி, மால்டா, மற்றும் எகிப்து போன்ற நடுநிலக்கடல் மக்களிடம் மிகவும் சாதாரணமாக இருக்கிறது மற்றும் இது மத்திய கிழக்கு, இந்திய துணைக் கண்டம், தென் கிழக்கு ஆசிய மற்றும் தென் சீன மக்களிடையேயும் சாதாரணமாக காணப்படும்.


அவுஸ்திரேலியாவில் சிறிய தாலசரத்தம் பொதுவாக இருக்கிறது.

## ஏன் இந்த இனம் சார் குழுக்களிடம் தாலசரத்தம் மிகவும் சாதாரணமாக இருக்கிறது?

இதற்குரிய காரணம் முற்றாகத் தெளிவில்லை ஆயினும் இந் நாடுகளில் சாதாரணமாக காணப்படும் மலேரியா நோயிற்கு எதிரான பாதுகாப்பு பலன் தாலசரத்தத்திற்கு இருக்கிறது.

## எனது பிள்ளைகள் பாதிக்கப்படுவார்களா?

சிறிய தாலசரத்தம் ஒரு அல்லது இரு பெற்றோருக்கும் இருக்கிறதா என்பதில் பிள்ளைகள் பாதிக்கப்படல் தங்கி இருக்கிறது.





(அ) பெற்றோரில் ஒருவருக்கு மட்டும் சிறிய தாலசரத்தம் இருந்தால் ஒவ்வொரு பிரசவத்திலும் 50% வாய்ப்பு உங்களுக்கு ஒரு சிறிய தாலசரத்தமுள்ள பிள்ளை பிறக்கும் சாத்தியம் மற்றும் 50% வாய்ப்பு உங்களுக்கு ஒரு தாலசரத்தமில்லாத பிள்ளை பிறக்கும் சாத்தியம்.

பெரிய தாலசரத்தமுள்ள பிள்ளை பிறக்கும் அபாயம் இல்லை.

(ஆ) இரு பெற்றோருக்கும் சிறிய தாலசரத்தம் இருந்தால் ஒவ்வொரு பிரசவத்திலும் 25% வாய்ப்பு உங்களுக்கு ஒரு பெரிய தாலசரத்தமுள்ள பிள்ளை பிறக்கும் சாத்தியம்

அத்துடன் 25% வாய்ப்பு உங்களுக்கு ஒரு தாலசரத்தமில்லாத பிள்ளை பிறக்கும் சாத்தியம் மற்றும் 50% வாய்ப்பு உங்களுக்கு ஒரு சிறிய தாலசரத்தப் பிள்ளை பிறக்கும் சாத்தியம்.




இரு பெற்றோருக்கும் சிறிய தாலசரத்தமிருந்து அவர்கள் பிள்ளைகள் பெறத் திட்டமிட்டால் உங்களுக்கு பல தெரிவுகள் இருக்கின்றன. நீங்கள் இவற்றை பொருத்தமான உடல்நல உத்தியோகஸ்தர்களுடன் கலந்தாலோசிப்பது முக்கியம்.